செ.வெ.எண்: 534/2016 நாள்: 16.08.2016

<u>மாவட்ட கண்ணொளி இழப்பு தடுப்புச் சங்கம், கன்னியாகுமரி மாவட்டம்</u>

<u>மாவட்ட ஆட்சியரின் பத்திரிகை செய்தி</u>

கண்புரை நோயாளருக்கான சிகிச்சை முறைகள் மிக வேகமாக முன்னேற்றமடைந்து கொண்டிருக்கிறது. முந்தைய காலங்களில் கையாண்ட கண்புரை அறுவை சிகிச்சை முறைகள் தற்போது செய்யப்படுவதில்லை. அதற்கு பதிலாக அதிநவீன முறையிலான மற்றும் பழைய முறையை விட மிகவும் மேம்படுத்தப்பட்ட "கண் லென்ஸ்" பொருத்தும் சிகிச்சையே கண்புரை நோயாளர்களுக்கு தற்போது செய்யப்பட்டு வருகிறது

இம்முறையில் கண்புரை நோயாளரின் கண்களில் உள்ள பழுதுபட்ட லென்ஸ்களுக்கு பதிலாக புதிதான வேறொரு லென்ஸ் மிகவும் எளிதான முறையில் பொருத்தப்படுவதால் கண்புரை நோயாளர்களுக்கு கீழ்கண்ட பயன்கள் ஏற்படுகிறது.

1. பார்வையானது மிக தெளிவாகவும், மிக நேர்த்தியாகவும் கிடைக்கிறது.
2. புதிய லென்ஸ் பொருத்தப்படுவதால் மிக நீண்ட நாட்கள் பார்வை தெளிவாக இருக்கிறது.
3. மிக கனமான கண்ணாடி அணிய தேவையில்லை.
4. மிக குறுகிய காலத்திலேயே (ஒரு வாரத்தில்) நமது இயல்பான பணிகளை செய்ய முடியும்.

மேலும் "கண் லென்ஸ்" பொருத்தும் கிசிச்சையின் முக்கியத்துவத்தை மக்கள் அறிந்து கொள்ளவும் அதன் முழு பயனையும் கண்புரை நோயாளர்கள் பெறுவதற்காக ஒவ்வொரு ஊராட்சிகளிலும் கீழ்கண்ட தேதிகளில் "கண் லென்ஸ் பொருத்தும் முகாம்" மூலம் நமது மாவட்டத்தில் உள்ள அனைத்து மக்களும் பயன்பெறும் வகையில் நடைபெற உள்ளது.

| ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | நடைபெறும் நாள் (நேரம் காலை 9 மணி முதல் மதியம் 12 மணி வரை) | நடைபெறும் இடம் |
|---|---|---|
| இராஜாக்கமங்கலம் | **17.08.2016** | அரசு நடுநிலைப் பள்ளி, பிள்ளையார்விளை |
| தக்கலை | **20.08.2016** | அரசு மேல்நிலைப் பள்ளி, கண்டன்விளை |
| தோவாளை | **23.08.2016** | ரிங்கிள் தவுபே சமுதாய நல கூடம், மிஷன் காம்பவுண்ட், ஆரல்வாய்மொழி |
| மேல்புரம் | **24.08.2016** | அரசு மருத்துவமனை, அருமனை |
| குருந்தன்கோடு | **29.08.2016** | அரசு ஆரம்ப சுகாதார நிலையம், வெள்ளிச்சந்தை |
| கிள்ளியூர் | **30.08.2016** | அரசு ஆரம்ப சுகாதார நிலையம், கிள்ளியூர் |
| அகஸ்தீஸ்வரம் | **31.08.2016** | அரசு ஆரம்ப சுகாதார நிலையம், மருங்கூர் (இ) இராஜாவூர் |

இத்திட்டத்தில் பயன்பெறும் அனைத்து கண்புரை நோயாளர்களுக்கும் இலவசமாக கண் லென்ஸ் பொருத்தும் சிகிச்சை மேற்கொள்ளப்படும். அதற்கு அடுத்த நாளே தங்கள் இல்லங்களுக்கு அரசு வாகனத்திலேயே கொண்டு விடப்படுவர்.

மேலும் கண்புரை சிகிச்சைக்கு நேரடியாக வரமுடியாதவர்கள் ஒரு சில நாட்களுக்கு முன்னதாகவே தங்கள் வட்டாரத்திலுள்ள கண் மருத்துவ உதவியாளர்களை அணுகினால் அரசு வாகனகளிலேயே அழைத்து செல்லப்பட்டு சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்படுவர்.

ஏனவே, கண்புரை நோயாளர்கள் இவ்வறிய வாய்ப்பினை பயன்படுத்தி, இந்த நவீன கண் லென்ஸ் பொருத்தும் சிகிச்சையை மேற்கொண்டு நமது கன்னயாகுமரி மாவட்டத்தில், கண்புரை நோயுற்றோர் அனைவரும் பார்வை அடைந்துள்ளனர் என்ற நிலையை ஏற்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மாவட்ட ஆட்சித் தலைவர்

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.